மாலைக்குள் அந்த ஊதியம் முழுவதும் அவர்களுக்கு வழங்கப்படும் என்று, இன்று காலையிலேயே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதுவரை இருக்கக்கூடிய 12 பணிமனைகளில் 100 சதவிகித பேருந்துகளும், 10 பணிமனைகளில் 90 சதவிகித பேருந்துகளும், 5 பணிமனைகளில் 50 சதவிகித பேருந்துகளும் இயங்குகின்றன. 6 பணிமனைகளில் உள்ள தொழிற்சங்கங்கள், பேருந்துகளை தொழிலாளர்கள் இயக்க விடாமல் தடுத்திருக்கிறார்கள். அவர்களிடத்திலும் எங்களுடைய போக்குவரத்துத் துறை அதிகாரிகள் மூலமாகப் பேசி, இன்று மாலைக்குள் அவர்களுக்கு முழுமையான சம்பளமான 55 கோடி ரூபாய் வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்து, பேருந்துகளை முழுமையாக இயக்குவதற்குண்டான நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, மேற்கொள்ளப்படும் என்பதை அவர்களிடத்தில் தெரிவித்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதி 9(1)—ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை பேரவையின் 7—வது கூட்டத்தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. திரு. எஸ்.பி. சண்முகநாதன்
3. திரு. சு. ரவி
4. திரு. இரா. குமரகுரு
5. திரு. சு. குணசேகரன்
6. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா

(இ) மானியக் கோரிக்கைகள், 2019–2020, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது: